# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்

# Our Lady of Deliverance Tamil Catholic Mission

மீட்பின் அன்னை மறைத்தளத்தின் 19வது கூட்டம் 15-08-2010 அன்று ஆலயத்தின் சிறிய மண்டபத்தில் மாலை 6:30 மணிக்கு பங்குதந்தையின் ஆரம்ப செபத்துடன் ஆரம்பமானது. அன்றைய தினம் திரு விஜி, றொபின், செல்வன் சாள்ஸ் ஆகியோர் சமூகம் தரவில்லை. கடந்த மாத கூட்ட அறிக்கையினை செயலாளர் அவர்களால் வாசிக்கப்பட்டது. சில திருத்தங்கள் செய்த பின்னர் திரு யூலியன் அவர்கள் முன்மொழிய திரு அலெக்ஸ் அவர்கள் வழி மொழிந்தார்.

மேலும் பசாறை முழு நேரமாக அருட்சகோதரி கார்மல் அவர்கள் அதனை செய்து வருகிறார், மழை நேரங்களில் மழை நீரானது பசாறினுள் செல்கிறது, அதனை உட் செல்லாத முறையில் அதனை திருத்தி செய்ய வேண்டும் என்றும் தந்தை கூறினார். மேலும் ஆரம்பிக்கப்ட்ட வேலை மழை காரணமாக தொடர்ந்து செய்யமுடியவில்லை. மற்றும் **Rigo** மடுமாதா சுற்றுலா பயண யாத்திரை மிகவும் மகிழ்வுடன் நிறைவு பெற்றது என்றும் கூறினார். கடந்த மாத கூட்ட அறிக்கையில் திரு யூலியன் அவர்கள் கூறிய முக்கிய விடயங்களை பங்குதந்தை எடுத்துக் கூறி தன்னால் செய்யக் கூடிய அளவு செய்யலாம் ஆனால் முழுமையாக செய்ய முடியாது என்றும் தான் நிற்கும் காலம் வரையும் கூடியளவு செய்யக் கூடியவற்றை செய்வேன் என்றும் பங்குதந்தை கூறினார்.

ஆலயத்தை நாம் வாங்கிக் கொண்டோம் ஆனால் என்ன வளர்ச்சியினை நாம் மேற்கொண்டோம் என்பதைப் பற்றி கவனத்தில் கொள்ள வேண்டும். மறை அறிவை ஆழப்படுத்துவதற்கு வளர்ந்து வருகின்ற பங்கு மாணவர்களின் நன்மை கருதி அவர்கள் தெளிவாக வேதாகம அறிவினை விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்கு அமைவாக சனிக்கிழமையிலும் ஞாயிற்றுகிழமையிலும் மாலையில் வேதாகம படிப்பினையை ஆங்கில மொழியிலும், பிரெஞ் மொழியிலும் கொடுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்ட்டது. மேலும் அவர்கள் திருப்பலி பூசையில் கலந்து கொள்ளும் அளவிற்கு (தமிழ் ஆங்கிலம் பிரெஞ்) பயிற்றுவிக்கப்பட்டு வளர வேண்டும் என்றும் வளர்ந்து வருகின்ற பிள்ளைகளுக்கு மறை அறிவு எந்தளவு பிள்ளைகளை போய் சேர்கின்றது என்பதை பெற்றோர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் தந்தை கூறினார்.

மேலும் இதைப்பற்றிய கருத்துக்களை திரு அம்புரோஸ் அவர்கள் தெரிவிக்கையில் ,ஆரம்பத்தில் இருந்தே தந்தை இதனை நன்றாக செய்ய வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு இருந்தது என்பதனை நான் அறிவேன். ஆனால் அதே நேரம் எமக்கென்று ஓர் ஆலயம் வாங்க வேண்டும் என்றும் பல கடமைகள் காரணத்தினால் தந்தை இதனை செய்ய முடியாமல் போனதையிட்டு வருந்துகிறேன். அத்தோடு திரு யூலியன் அவர்கள் இந்த முக்கியமான பணிகளை தற்பொழுது முன் வைத்தமைக்கு அவருக்கு நன்றி சொல்வதோடு இன்னும் குறுகிய காலம் தான் பங்குதந்தைக்கு உள்ளது அதற்குள் முடிந்தளவு தந்தை செய்யக் கூடியவற்றை செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

ஆசிரியர்கள் கூட்டத்திலும் இந்த விடயம் பற்றி கலந்தாலோசிப்பதாகவும், மேலும் பிள்ளைகள் எந்த மொழியில் இலகுவாக மறையறிவினை பெற்று விளங்கிக் கொள்கிறார்களோ அந்த மொழியில் அவர்களுக்கு பயிற்றுவித்தல் அவசியம் என்றும் அவர் கூறினார். மேலும் திருப்பலியில் ஆற்றப்போகும் மறையுரையை மறைக்கல்வி மாணவர்களுக்கு திருப்பலிக்கு முன்னர் அன்றைய தினமே அவர்களுக்கு விளக்கம் கொடுப்பது நல்லது என்றும் தீர்மானிக்கப்பட்டது. வேதாகம மறையறிவு வகுப்புக்கள் புரட்டாதி மாதத்திலிருந்து சனி ஞாயிறு தினங்களில் மாலையில் ஆங்கில மொழியிலும் பிரெஞ் மொழியிலும் ஆரம்பமாகவுள்ளது என்றும் தந்தை கூறினார். அத்தோடு இவ்வகுப்புகள் கற்றுக்கீசன் வகுப்புகள் அல்ல என்றும் இது ஒரு வேதாகம மறையறிவு வகுப்பு என்றும் தந்தை அவர்கள் கூறினார்கள். மேலும் தீர்மானிக்கப்பட்ட வேதாகம மறையறிவு வகுப்புக்களுக்கு வேறு குருக்கள் அல்லது ஆசிரியர்கள் பயிற்றுவிக்கும் வேளைகளில் பங்குதந்தையின் பிரசன்னம் அங்கு கட்டாயம் இருக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

திருப்பலியில் காணிக்கை எடுப்பவர்கள் அமர்ந்திருக்கும் இடமானது அவர்கள் பின்புறமாக இருப்பவர்களை பூசையை பார்க்க முடியாமல் மறைப்பதால் அவர்களை மாற்றி இருக்கும்படி சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன ஆனால் இது முதல் ஒரு முறையும் பங்கு சபையில் கலந்துரையாடப்பட்டது என்ற வகையில் காணிக்கை எடுப்பவர்கள் அதே இடத்தில் அவர்கள் இருப்பார்கள் என்றும் பூசை பார்க்க மறைக்கிறது என்பவர்கள் தெளிவாக காணக்கூடிய இடம் பார்த்து அமர்ந்து பார்க்கும் படியும் அன்றைய தினம் தீர்மானிக்கப்பட்டது. அடுத்த ஆண்டிற்கான நாட்காட்டி கலண்டர் உருவாக்கப்பட வேண்டும் அதற்கு அனைவரின் ஒத்துழைப்பை தந்து உதவ வேண்டும் என்றும் நிர்வாக சபை உறுப்பினர்களும் பங்கு சபை உறுப்பினர்களும் இணைந்து ஒரு ஒன்று கூடல் நிகழ்வொன்றினை புரட்டாதி மாதம் 2வது கிழமை மேற்கொள்ளலாம் என்றும் கலந்துரையாடப்ட்டது.

எமது ஆலயத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் ஒன்று கூடும் பெரியோர்களின் விபர நிலை அறிந்து அவர்கள் அனைவரும் ஆலயத்தில் ஒன்றிணைவதற்கு போக்குவரத்து நிலை ஒரு முக்கியமான பிரச்சனையாக காணப்படுகிறது என்றும், பங்குதந்தை 40$ வழங்கி தனது வாகனத்தைப் பயன்டுத்தி அவர்களுக்கு உதவுவதாகவும், திரு யூலியன் அவர்கள் தான் கூறிய 6 மாதங்கள் உதவி செய்துள்ளார் என்றும் ஆனால் பெரியோர்களின் போக்குவரத்து நிலை இன்னும் நிறைவாக இல்லை என்றும் திருமதி கலிஸ்ரா தவராஜா அவர்கள் கூறினார். அந்த வகையில் பெரிறோர்களின் பிள்ளைகளை அல்லது அவர்களின் உறவினர்களை அழைத்து நிலைமைகளை எடுத்துக் கூறி அவர்களின் கருத்துக்களையும் கேட்டுப்பார்க்கலாம் என்றும் இதனை இந்த மாதமே அவர்களை அழைத்து கதைப்பதாக முடிவு முடிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் நிர்வாக சபையிடமும் இதை கலந்து ஆலோசிப்பதாக தந்தை கூறினார்.

மேலும் எமது மீட்பின் அன்னை மறைத்தளத்தினால் முன்னெடுக்கப்படும் உதவுங்கரங்கள் பராமரிப்பு சம்மந்தமான விடயங்கள், பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு கட்டப்படும் கட்டிட பொறுப்பை அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளார் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் தற்போது எமது பங்கிற்கு வருகை தரவுள்ளார். அதே சமயம் ஒரு ஞாயிறு தினம் அன்று பங்கு மக்களாகிய அனைவருக்கும் உதவுங்கரங்கள் சம்மந்தமான விடயங்களை அவர் விளக்கிக் கூறுவார் என்றும் எமது புதிய பங்குதந்தை அருட்திரு யூட் அமலதாஸ் அடிகளார் அங்கு நேரடியாக சென்று வந்தார் என்றும் அவரிடம் அங்கு நடைபெறுகின்ற சிலவற்றைக் கூறும்படியும் பங்குதந்தை கேட்டார். அதற்கமைவாக அங்கு சென்று அறிந்தவற்றை புதிய பங்குதந்தை கூறுகையில் மாதகல் என்ற இடத்தில் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது அதற்கு கூரை இன்னும் போடப்படவில்லை 25 பேர்கள் மட்டில் அங்கு பாதிக்கப்பட்டவர்கள் உள்ளார்கள். அவர்களுக்கு J.R.S என்ற நிறுவனம் உதவி செய்து வருகின்றது. இன்னும் சில உதவிகள் அவர்களுக்கு கிடைக்கின்றது எனவும் அங்கு பொறுப்பாக உள்ளவர்களிடம் கலந்து பேசியபோது இவ்வாறு காணப்படுகிறது என்றும் அவர் கூறினார். மேலும் இது கனடா மொன்றியல் மீட்பின் அன்னை மறைத்தள பங்கு மக்களால் மேற்கொள்ளப்படுகின்ற முக்கியமான ஓர் விடயம் என்பதால் இதனை எங்கள் கட்டிடம் என்று சொல்லி செய்ய வேண்டும். மேலும் அவர் கூறுகையில் தன்னை தனிப்பட்ட முறையில் அழைத்தும் இந்த முயற்சியை கைவிட வேண்டாம் என கூறியதாகவும் தந்தை யூட் அமலதாஸ் அடிகளார் கூறினார். தற்பொழுது நாங்கள் உதவுங்கரங்கள் கட்டிட உதவி தான் செய்து வருகின்றோம் பிள்ளைகளை இன்னும் பொறுப்பு எடுக்கவில்லை என்றும் அருட்தந்தை ஜெயக்குமார் வந்ததும் விளக்கம் கொடுத்த பின்பும் ஒரு தேர்வொன்றினை செய்து இதற்கான வழிமுறைகளை தொடரலாம் எனவும் பங்குதந்தை கூறினார்.

மேலும் அருட்தந்தை போல் றொபின்சன் அடிகளார் எமது மீட்பின் அன்னை மறைத்தளத்தில் 23. 24ம் திகதிகளில் வழிபாடு ஒன்றினை செய்வதற்கு பங்குதந்தையிடம் தொடர்பு கொண்டதாக அன்றைய கூட்டத்தில் தந்தை கூறினார். ஆனால் திடீர் என்று குறுகிய காலத்திற்குள் கேட்டமையினால் பங்கு சபை நிர்வாகத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை இதனை பங்குதந்தை அவருக்கு அறிப்பதாக கூறினார். மறைத்தள பங்கு மக்களின் இல்லங்கள் தோறும் மாதாவை கொண்டு செல்லும் மரியாயின் சேனை உறுப்பினர்கள் ஒவ்வொரு இல்லங்களிலும் குறிப்பிட்ட நாட்கள் இருந்த பின்னர் மாதாவை அடுத்த இல்லங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும் எனவும், குறிப்பிட்ட நாட்களின் பின்னர் இன்னொரு இல்லம் செல்லக் கிடைக்காத சந்தர்ப்பங்களிலும் அல்லது வேறு ஏதும் சந்தர்ப்பம் சூழ்நிலையிலும் மாதாவை ஆலயத்தில் கொண்டு வந்து வைக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இறுதியாக திரு அலெக் அவர்களின் இறுதிச் செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

| | |
|---|---|
| அருட். தந்தை அன்றூா தவராஜசிங்கம் | திரு.நெல்சன் ஆரோக்கியநாதன் |
| பங்குத்தந்தை | செயலாளர் (பங்குச்சபை) |
| மீட்பின் அன்னை மறைத்தளம் | மீட்பின் அன்னை மறைத்தளம் |